**O.S. No. 10 /2014**

**Date: 09.01.2026**

**பி.வா.சா.1 மாடசாமி**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் மாட்டு வியாபரம் பார்த்து விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியாது. நான் ராஜரத்தினத்திடமிருந்து கிரையம் வாங்கினேன். ராஜரத்தினம் மணியம்மாள் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றிருந்தார். ராமசாமி நாயக்கர் மற்றும் அவரது மக்கள் குருசாமி நாயக்கர், சீனி நாயக்கர் ஆகியோரிடமிருந்து மணியம்மாள் கிரையம் பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் மணியம்மாள் கிரையம் பெற்ற விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மணியம்மாள் ராமசாமி நாயக்கர் வகையறாவிடமிருந்து கிரையம் பெற்றிருக்கலாம். பி.வா.சா.ஆ.2 ன் படி மணியம்மாள் ராஜரத்தினத்திற்கு கிரையம் கொடுக்கும் போது பிவா.சா.ஆ 1 ன் அசல் ஆவணத்தையும் கொடுத்தார் என்றால் சரிதான். ராஜரத்தினம் எனக்கு பி.வா.சா.ஆ.3 ன் படி கிரையம் கொடுக்கும் போது பி.வா.சா.ஆ.2 அசல் ஆவணத்தை என்னிடம் கொடுத்தார். நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.3 ஆவணங்களுக்குரிய அசல் ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை. அசல் ஆவணங்களை தாக்கல் செய்யாததற்கு குறிப்பிட்ட காரணங்கள் எதுவும் இல்லை. அசல் ஆவணங்கள் வழக்கறிஞரிடம் உள்ளது. எனது சொத்தின் சர்வே எண். 528/2.சொத்தின் மேல் பக்கம் உள்ள சர்வே எண்.528/1 என்று சொன்னால் எனக்கு தெரியாது. சர்வே எண்கள். 528/1, 528/2 மற்றும் 526/8 ஆதியில் உத்தைய நாயக்கர் குமாரர் ராமசாமி நாயக்கர் மற்றும் அவரது மக்கள் குருசாமி நாயக்கர், சீனி நாயக்கர் ஆகியோருக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் என்கு தெரியாது. நான் கிரையம் பெற்ற பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் குருசாமி நாயக்கர் நிலத்திற்கு கிழக்கு, 25 அடி அகல கிழ மேல் தெருவிற்கும் தெற்கு, விஸ்வநாதப்பிள்ளை நிலத்திற்கு மேற்கே , ஞான மணி நிலத்திற்கு வடக்கே

இம்மாலுக்குல் 95 செண்ட் நிலத்தை கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். நான் கிரையம் பெறும் போது மேற்படி எனது சொத்திற்கு மேற்கு மற்றும் வடபுறம் பிளாட்டுகளாக இருந்தது என்றாலும், அதனால் தான் கிழமேல் தெரு என்று எல்லையில் காட்டப்பட்டுள்ளது என்றால் எனது கிரைய ஆவணத்தில் நான்கு மால்கள் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. நான் கிரையம் பெற்ற நிலத்திற்கு வடபுறம் பஞ்சு அரைக்கும் மில் இருந்தது . நான்கு மால்கள் தவறாக குறிப்பிடப்பட்டிருந்ததை சீர்திருத்தம் செய்து கொள்ள நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. நான் கிரையம் பெற்ற பி.வா.சா.ஆ.3 ஆவணம் மற்றும் அதற்கு முந்தைய ஆவணங்களாக பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆகிய ஆவணங்களில் நான்கு மால்களில் அதே மாதிரியாக தான் குறிப்பிடப்பட்டுள்ளதால்தான் சீர்திருத்தம் செய்ய நடவடிக்கை எதும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாகநான் கிரையம் பெற்ற சொத்தின் வடபுறம் பஞ்சு அரைக்கும் மில் உள்ளதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எனது சொத்தற்கு அடுத்ததாக பஞ்சு அரைக்கும் மில் இல்லை என்றாலும் அது வடகடைசியில் உள்ளது என்றாலும் சரியல்ல. நான் 2003ம் ஆண்டு சொத்தினை கிரையம் பெறும் போது மேல்புறம் மற்றும் வடபுறம் பிளாட்டுகளாக இருந்தது என்றால் சரியல்ல. வாதிகள் நான் கிரையம் பெறுவதற்கு 10 ஆண்டுகளுக்கு முன்பாகவே கிரையம் பெற்று பிளாட்டாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. நான் 2003 ல் கிரையம் பெற்றதற்கு பின்னிட்டு மேற்கில் உள்ள சொத்துக்களை எனது சொத்துக்களுடன் சேர்த்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு நிலுவையில் இருக்கும் போது சொத்திற்கு வேலி போட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கிரையம் பெற்றவுடன் 2003ம் ஆண்டிலேயே வேலி போட்டுவிட்டேன். பி.வா.சா.ஆ.4 பட்டாவினை கடந்த 2020ம் ஆண்டு வாங்கினேன் என்றால் 2010ம் ஆண்டிலேயே எனது பெயருக்கு பட்டா மாற்றிவிட்டேன் பி.வா.சா.ஆ.4 ஆவணமானது 2020ல் பெறப்பட்டது. மணியம்மாள் பெயரில் உள்ள பட்டா நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா

என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் கிரையம் பெற்ற ராஜரத்தினம் பெயரில் உள்ள பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. மணியம்மாள் பெயரில் உள்ள பட்டாவை என்னிடம் கொடுத்தார்கள். நான் ராஜரத்தினம் பெயருக்கு பட்டா மாற்றி அதன் பின்னர் எனது பெயருக்கு பட்டாவை மாற்றிக்கொண்டேன். பி.வா.சா.ஆ.5 தீர்வை ரசீதுகள் வழக்கு நிலுவையில் இருக்கும் போது பெறப்பட்டது தான் என்று சொன்னால் சரிதான். நீதிமன்றத்தில் இருந்து ஆணையர் தாவா சொத்தினை பார்வையிட வந்தார். அவர் வரும்போது நானும் உடன் இருந்தேன். தாவா சொத்தினை சர்வே யர் உதவியுடன் அளக்கும்போது தாவா சொத்து கிராம கணக்கில் புஞ்கை வகைப்பாட்டில் இருந்து வருவதாகவும், ஆய்வு தேதியில் மனு தபசில் சொத்தானது மனை பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளதாக வருவாய் துறை ஆவணங்களில் பதிவு இல்லை என்று சர்வேயர் தெரிவித்ததால் தபசில் சொத்தினை மனுவில் கண்டுள்ள விவரப்படி அளந்து காண்பிக்க இயலவில்லை என்று சர்வேயர் தெரிவித்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. சர்வேயர் உதவியுடன் அளந்து தபசில்சொத்து ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதியை அடையாளம் காணமுடியவில்லை என்று ஆணையர் தனது அறிக்கையில் கூறியுள்ளார் என்றால் சரியல்ல. நான் எனது சொத்துடன் மேற்கில் உள்ள பிளாட்டுக்களை இணைத்து கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி கோரியவாறு பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

(Sd/-) P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.